


முப்பெரும் விழா நடத்தி

# வள்ளலாருக்குப் புகழ் சேர்த்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## வடலூரில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

வடலூர், அக். 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (05.10.2024) கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையத்தில் நடைபெற்ற திருஅருட்பிர காச வள்ளலாரின் 202ஆம் வருவிக்க உற்றநாள் விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, வள்ளலார் குறித்த நூலினை வெளியிட்டு, அன்னதானத்தை தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

“வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெறும் வள்ளலாரின் 202ஆம் வருவிக்க உற்றநாள் விழாவிற்கு வருகை தந்து, அவரை வணங்கி சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்னதானத்தை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்.

திருஅருட்பிரகாச வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் தான் பல்வேறு நற்செயல்கள் நடைபெற்றுள்ளன என்பதனை யாரும் மறந்திருக்க முடியாது. சென்னையில் வள்ளலார் அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு வள்ளலார் நகர் என்று பெயர் சூட்டியதோடு, அந்த பகுதியிலுள்ள பேருந்து நிலை யத்திற்கும் அவர் பெயரை சூட்டி பெருமை சேர்த்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

இந்த ஆட்சி ஏற்பட்டவுடன், தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, வடலூரில் வள்ளலார் சர்வதேச மையத்தை ஏற்படுத்துவேன் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் படி ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், இடையில் ஏற்பட்ட சிறு தடைகளால் பணிகள் தொடர்ந்து நடைபெறாமல் இருந்த சூழ்நிலையில் தற்போது அந்த பணிகள் மீண்டும் தொடங்கப்படும் நல்ல சூழ்நிலை வந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருஅருட்பிரகாச வள்ளலார் பிறந்த அக்டோபர் 5-ஆம் நாள் இனி ஆண்டு தோறும் “தனிப்பெருங்கருணை நாள்” என கடைபிடிக்கப்படும் என அறிவித்தார்கள். மேலும், வள்ளலார் அவர்கள் தருமசாலை துவக்கிய 156வது ஆண்டு தொடக்கம், வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200வது ஆண்டு தொடக்கம், ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 வது ஆண்டு என மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழாவை கொண்டாட உத்தரவிட்டதோடு, அதற்கென டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழுவை யும் அமைத்தார்.

வள்ளலார் முப்பெரும் விழாவின் முதல் நிகழ்ச்சியாக, 2022-ஆம் ஆண்டு சென்னை ராஜா அண்ணாமலைபுத்தில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, “வள்ளலார் - 200” இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு இலக்கியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டதோடு, தொடர் அன்னதானமும் வழங்கப்பட்டது. இப்பணிகளுக்காக முதலமைச்சர் அவர்கள் ரூ.3.25 கோடியை அரசு நிதியாக வழங்கினார்.

அதேபோல 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 5 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ஓராண்டு தொடர் நிகழ்வின் நிறைவு விழாவில் முதலமைச்சர் அவர்கள் வள்ளலார் சர்வதேச மையம் கட்டுவதற்கான அரசாணையை வழங்கியதோடு, வள்ளலார் குறித்த புகைப்பட கண்காட்சி மற்றும் அன்னதானத்தை தொடங்கி வைத்து, முப்பெரும் விழாவினை சிறப்பாக நடத்திட்ட சிறப்புக் குழுவினரை பாராட்டி சிறப்பித்தார்கள்.

இப்படி தொடர்ந்து வள்ளலாரின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற அரசாக, வாழும் வள்ளலாராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றுகின்ற பணியில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். வள்ளலாருக்கு பெருமை சேர்க்கும் இத்தகைய பணிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாவட்ட அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கு துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணுபிரசாத், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்ய செந்தில் குமார், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. இராஜாராம், இந்து சமய அறநிலையத் துறை மண்டல இணை ஆணையர் ஜெ. பரணிதரன், உதவி ஆணையர் ஆர்.சந்திரன், அறங்காவலர் குழுத் தலைவர் க, அழகானந்தம் மற்றும் அறங்காவலர்கள், நிர்வாக அலுவலர் ஜெ. ராஜா சரவணகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், சுந்தரம் ஊராட்சி, சுந்தரம் கிராமத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.13 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நியாயவிலைக் கடை கட்டடத்தை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜீவா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

